# வாழ்க; தகைசால் தமிழர் ஆசிரியர் வீரமணி!

தமிழ்நாடு அரசின் "தகைசால் தமிழர் விருது" இம்முறை மானமிகு ஆசிரியர் வீரமணி அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது! விருது அறிவிக்கப்பட்ட முதலாண்டு கம்யூனிஸ்ட் இயக்க மூத்த தலைவர் சங்கரையாவுக்கு வழங்கப்பட்டது! அடுத்த ஆண்டு நல்லகண்ணுவுக்கு வழங்கப்பட்டது. அப்போதே அந்த விருது பெருமைப்பட்டது; இந்த ஆண்டு ஆசிரியர் வீரமணி அவர்களுக்கு அந்த விருதினை தமிழ்நாட்டு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வழங்கி, அந்த விருதுக்குப் பெருமை சேர்த்ததுடன் அதற்கு மெருகும் தீட்டியுள்ளார்.

**ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக 10 வயதிலே மைக்கைப் பிடித்துக் கொள்கைப் பிரச்சாரம் செய்யத் துவங்கி, 90 வயது கடந்தும் தான் வரித்துக் கொண்ட கொள்கையிலிருந்து தடம்மாறாது, அதனால் ஏற்படும் ஏற்றம் இறக்கம் குறித்து சிறிதும் கவலைப்படாது, அதே நேரத்தில் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்கிற உத்வேகத்தோடு சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் அந்தத் தன்னலமற்ற தியாகச் செம்மலுக்கு இந்த விருது கிடைத்ததால், விருது பெருமை பெற்றுள்ளது!**

ஆசிரியர் வீரமணி அவர்களைப் பொறுத்தவரை அவர் விருது, பதவி, இவைகளை விட தந்தை பெரியாரின் உண்மைத் தொண்டன், அவரது கொள்கை விசுவாசி என்ற முத்திரை தன்மீது பதிக்கப்படுவதையே விரும்பியவர்! அவரது அரசியல் வாழ்வில் என்றுமே பட்டம், பரிசுகள் பெற வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கியதே இல்லை. அவர் மட்டும் விரும்பியிருந்தால் எத்தனையோ பெரிய



பதவிகளைப் பெற்றிருக்க முடியும்!

**தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் தவிர்த்த அரசியல் எடுபடாது என்ற நிலையில், திராவிட இயக்கப் போர்வையில் தோன்றிய சில புது இயக்கங்கள் தங்கள் இயக்கத்துக்கு திராவிட இயக்க அங்கீகாரம் பெற்றிட ஆசிரியர் வீரமணியின் கடைக்கண் பார்வை கிட்டாதா என்று காத்திருந்த காலங்கள் உண்டு!**

அந்தக் காலகட்டங்களில் மானமிகு வீரமணி நினைத்திருந்தால், எத்தனையோ பதவிகளை, பரிசுகளை ஏற்று ராஜவாழ்க்கை நடத்தியிருக்க இயலும்! அந்த நேரங்கள்கூட அவரை அசைத்திட முடியவில்லை! அவரது அரசியல் வாழ்வு என்பது அர்ப்பணிப்பு வாழ்வாகவே அமைந்துவிட்டது! அதுமட்டுமல்ல; நமது இளைஞர்களுக்கு அது ஒரு பாடமாக அமைந்துள்ளது!

இன்றைய இளைஞர்களில் பலர் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள் போன்ற பதவிகளுக்காக அரசியல் இயக்கங்களில் தங்களை இணைத்துச்செயல்படுவதைக் காண்கிறோம்! ஆனால் பத்து வயது பாலகனாக அன்று அரசியலில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்படத் துவங்கிய ஆசிரியர் வீரமணி அவர்கள், 90 வயதைக் கடந்தும் எந்தப் பதவியும் எதிர்பாராது தந்தை பெரியாரின் சாதி, மத, பேதமற்ற சமத்துவ சமுதாயம் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும் - அதற்கு உழைப்பவர்களுக்கு உறுதுணையாகச் செயல்படுவேன் என்ற உள்ளார்ந்த உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்!



"தகைசால் தமிழர் விருது"க்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் வீரமணி, தலைவர் கலைஞர் ஒருமுறை குறிப்பிட்டபடி,

**"பத்து வயது முதற்கொண்டே பெரியாருடன் பணிபுரிந்துகொண்டு, பள்ளியிலும் பயின்று, கல்லூரியிலும் பட்டம் பெற்று திராவிடர் கழகத்தின் ஓய்வறியாத் தொண்டனாக விளங்கிய வீரமணி, இளந்தளிர்ப் பருவத்திலே மேடையிலே பேசுகிற வியப்புமிகு நிகழ்ச்சியைக் காணப் பெருங்கூட்டம் திரளும்".**

**- ஆம், தன் தளிர் பருவத்திலேயே ஆற்றலை அள்ளித்தெளித்த அந்தப் பெருமகன்தான் இன்று "தகைசால் தமிழர்" விருதைப் பெறுகிறார்!**

**முரசொலி செல்வம்**

இந்த விருதுக்கு ஆசிரியர் வீரமணியைத் தேர்ந்தெடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஸ்டாலினை எப்படிப் புகழ்வது என்றே புரியவில்லை. அன்று பெரியவர் சங்கரையா தேர்வு முதற்கொண்டு, இன்று ஆசிரியர் வீரமணி தேர்வு வரை அவரது முடிவுகள் தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆழ்ந்த - தெளிந்த முதிர்ச்சிக்கு அடையாளங் களாக வெளிப்படுகின்றன!

இன்றைய கால கட்டங்களில் பலநேரங்களில் பலருக்குத் தரப்படும் பட்டங்கள் - பவிசு இழந்து நிற்கும் நிலையில், பத்தோடு இதுவும் ஒன்றுதானே என்ற பரிதாப நிலையை அடைந்திடும் நேரத்தில், முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் 'தகைசால் தமிழர்' பட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கும் தகுதிமிக்கவர்களால், ஆற்றலாளர் களால், தன்னலமற்று சமுதாய சேவை செய்பவர்களால் அந்தப் பட்டங்கள் மீண்டும் பெருமை பெறத் தொடங்கிவிட்டன.

**வாழ்க; தகைசால் தமிழர் ஆசிரியர் வீரமணி!**

## தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

... முதல் பக்கத் தொடர்ச்சி

**வருகிற 17.8.2023 (வியாழக்கிழமை) அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டி னம் சாலை, பேராவூர் என்ற இடத் தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.**

தென் மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 19 கழக மாவட் டங்களின், மாவட்டக் கழகச் செயலா ளர்கள், தத்தமது மாவட்டங்களுக் குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட் டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்து ரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பா ளர்கள் (BLA2) அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய் திட வேண்டுமென கேட்டுக்கொள்கி றேன்.

**1.இராமநாதபுரம், 2.சிவகங்கை, 3. திண்டுக்கல் கிழக்கு, 4.திண்டுக்கல் மேற்கு, 5.தேனி வடக்கு, 6.தேனி தெற்கு, 7.மதுரை மாநகர், 8.மதுரை வடக்கு, 9. மதுரை தெற்கு, 10.விருது நகர் வடக்கு, 11. விருதுநகர் தெற்கு, 12.திருநெல்வேலி கிழக்கு, 13.திரு நெல்வேலி மத்திய, 14. தென்காசி வடக்கு, 15.தென்காசி தெற்கு, 16.தூத் துக்குடி வடக்கு, 17.தூத்துக்குடி தெற்கு, 18. கன்னியாகுமரி கிழக்கு, 19. கன்னியாகுமரி மேற்கு,**

இவ்வாறு கழகப் பொதுச் செயலா ளர் துரைமுருகன் அவர்கள் அறிவித் துள்ளார்.

### கைத்தறி உற்பத்தி ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதைத் தடுக்க அரசு சட்டப்படி கடும் நடவடிக்கை!

## கைத்தறி நெசவாளர்கள் போராட்டத்தைக் கைவிடுவீர்!

### தொடர்ந்து தொழிலில் ஈடுபடுமாறு - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

சென்னை,ஆக.2-

கைத்தறி உற்பத்திக் கென ஒதுக்கீடு செய்யப் பட்ட இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதை தடுக்க அரசு சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற் கொண்டு வருவதால், போராட்டம் மேற்கொள் ளும் கைத்தறி நெசவாளர் களை போராட்டத்தை கைவிட்டு தொடர்ந்து தொழிலில் ஈடுபடுமாறு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி கேட்டுக்கொண் டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் பட்டு கைத்தறி நெசவு தொழி லில் ஈடுபட்டுள்ள நெசவா ளர்கள், காஞ்சிபுரம், ஆரணி, திருவண்ணா மலை, திருபுவனம், கும்ப கோணம், சேலம், திருப் பூர் மற்றும் கோயம்புத் தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ளனர்.

பொதுவாக ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்தநிலை காரணமாக ஏற் றுமதியில் தொய்வு மற்றும் உள்ளூர் சந்தையில் கொள் முதல் குறைவு காரண மாக, குறிப்பாக பட்டு உற் பத்தி விற்பனை வணிகம் பெரும்பாலும் சந்தையில் குறைந்து காணப்படுகி றது.

பட்டு இரக வாடிக்கை யாளர்களிடையே விலை குறைவான இரகங்க ளையே வாங்கும் நிலை



அதிகம் உருவானதாலும் மற்றும் அதிக விலை மதிப் புள்ள சேலைகளை வாங் கும் நிலை தற்காலிகமாக குறைந்துள்ளது.

அதன் காரணமாக தனி யார் பட்டு கைத்தறி உரி மையாளர்கள் தங்களது உற்பத்தியை குறைத்தும் மற்றும் சில்லரை விற்ப னையாளர்கள் தங்கள் பட்டு இரக இருப்பினை சந்தை தேவைக்கேற்ப கணிசமாக குறைத்தும் வருகின்றனர்.

எனினும், பட்டு கைத் தறி நெசவாளர்களைப் பாதுகாக்க கூட்டுறவு அமைப்பின் கீழ் நெசவா ளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினையும் அதற்கு ஊதியமும் வழங் கப்பட்டு அவர்களது தயா ரிப்புகள் உடனுக்குடன் கொள்முதல் செய்யப் பட்டு வருகிறது.

கைத்தறித் துறை, கைத் தறி ரக ஒதுக்கீடுச் சட்டத் தின்படி அமலாக்க அலுவ லகம் மூலம் பட்டு மற்றும் பருத்தி உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களில் தொடர்ந்து தீவிர ஆய்வு மேற்கொண்டு கைத்தறி யில் உற்பத்தி செய்யப்ப டும் பட்டு மற்றும் பருத்தி ஒதுக்கீடு இரகங்களை சட் டத்திற்கு புறம்பாக விசைத்தறியில் உற்பத்தி செய்வதை கண்காணித்து தடுத்து வருகிறது. மேலும், கைத்தறி உற்பத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரகங்கள் உள்ளூர் மற் றும் வெளிமாநிலங்களில் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டு ஜவுளி நிறு வனங்களிலும், தனியார் கடைகளிலும் விற்பனை யில் ஈடுபடுவதை தடுக்க வும் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை 1500க்கும் மேற்பட்ட விசைத்தறிகள். பறக்கும் படையினால் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டு கைத்தறிக்கு ஒதுக் கீடு செய்யப்பட்ட இரகங் கள், விசைத்தறியில் உற்பத்தி செய்வதை கண் டறிந்து 16 விசைத்தறி உரி மையாளர்கள் மீது முதல் தகவல் அறிக்கை(FIR) பதிவு செய்யப்பட் டுள்ளது.

மேலும் பட்டு ரகம் விற் பனை செய்யும் பிரசித்திப் பெற்ற கடைகளிலும் இது போன்ற திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, காஞ்சிபுரம், ஆரணி, திரு வண்ணாமலை, திருபுவ னம், கும்பகோணம், சேலம், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் உள் ளிட்ட பகுதிகளில் 60க்கும் மேற்பட்ட இடங்களில் கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் பற்றி விழிப்பு ணர்வு முகாம்கள் நடத்தப் பட்டுள்ளன.

உற்பத்தி தேக்க நிலை தொடர்பாக அரசு பல் வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதால், தற்காலிக தேக்க நிலை சீர டைந்து உற்பத்தி மற்றும் விற்பனை மேம்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டு வருவதாலும், கைத் தறி உற்பத்திக்கென ஒதுக் கீடு செய்யப்பட்ட இரகங்களை விசைத்தறி யில் உற்பத்தி செய்வதை தடுக்க அரசு சட்டப்படி பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாலும், கைத்தறி நெசவாளர்களை போராட்டத்தை கைவிட்டு தொடர்ந்து தொழிலில் ஈடுபடுமாறு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கேட் டுக்கொண்டுள்ளார்.

மேலும், கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்திற்கு புறம்பாக உற்பத்தி செய் வது கண்டறியப்பட்டால் கடுமையான சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்ப டும். இச்சட்டத்தினை மீறு பவர்கள் மீது கைத்தறி நெசவாளர்கள்/பொதுமக் கள் கைத்தறி ஆணையரக கட்டுப்பாட்டு அறையின் 9176627637, 9176617637 ஆகிய Whats App எண்க ளுக்கு புகார் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கைத்தறி மற் றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரி வித்துள்ளார்.

### சுதந்திரப் போராட்ட வீரர்

## தீரன் சின்னமலை நினைவு நாள்: சிலைக்கு முதல்வர் மரியாதை!

சென்னை, ஆக. 3-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்க ளின் நினைவுநாளை முன் னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவு ருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரி யாதை செலுத்த உள் ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்க ளின் நினைவுநாளை முன் னிட்டு, இன்று (03.08.2023) காலை 9.45மணியளவில் சென்னைகிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத் தில் அமைந்துள்ள அன்னா ரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்கள் திருப்பூர் மாவட் டம் காங்கேயம் வட்டம் அருகேயுள்ள மேலப்பா ளையம் எனும் ஊரில் ரத்தி னசாமி கவுண்டர் - பெரி யாத்தா தம்பதியினருக்கு 17.04.1756 ஆம் ஆண்டு மக னாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர். தீரன்சின்ன மலை அவர்கள் இளம்வய திலேயே சிலம்பாட்டம், வாள்பயிற்சி, வில்பயிற்சி, மல்யுத்தம், தடிவரிசை உள் ளிட்ட பல பயிற்சிகளை கற்று சிறந்த வீரராக திகழ்ந் தார்.

கொங்கு நாட்டை மைசூர் மன்னர் ஆட்சி புரிந்ததால் கொங்குநாட்டு வரிப்பணம் சங்ககிரி வழி யாக மைசூர் மன்னருக்குச் சென்றது. இத்தகவலை அறிந்த தீரன்சின்னமலை மைசூர் மன்னருக்குச் செல் லும் வரிப்பணத்தைப் பெற்று ஏழைகளுக்கு வழங் கினார். வரிகொண்டு சென்ற தண்டல்காரர்களி டம் 'சென்னி மலைக்கும் சிவன் மலைக்கும் இடையே சின்னமலை பறித்ததாகச் சொல்' என்று கூறியதால் அன்று முதல் 'சின்னமலை' என்ற பெயர் பெற்று மக்களால் அன்பு டன் அழைக்கப்பட்டார். தீரன் சின்னமலை அவர்கள் ஆன்மிக பணிகளில் சிறந்து விளங்கிய காரணத்தினால் திருக்கோவில்களுக்குப் பல் வேறு திருப்பணிகள் செய்வ தில் ஆர்வம் காட்டினார். மேலும் தமிழ்புலவர் பெரு மக்களையும் ஆதரித்து வந்தார்.

ஆங்கிலேய கிழக்கிந்தி யக் கம்பெனிப்படையினர் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்திட தொடர்ந்து போரிட்டு 1801ஆம் ஆண்டு ஈரோடு காவிரிக் கரையி லும், 1802ஆம் ஆண்டு ஓடா நிலையிலும், 1804 ஆம் ஆண்டு அரச்சலூரிலும் ஆங் கிலேயருடன் நடைபெற்ற போர்களில் தீரன்சின்ன மலை அவர்கள் மாபெரும் வெற்றி பெற்றார். தீரன்சின் னமலை அவர்களைப் போரில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த ஆங்கி லேயர்கள் சூழ்ச்சி மூலம் அவரைக் கைது செய்து போலி விசாரணை நடத்தி 31.07.1805 அன்று சங்ககிரிக் கோட்டையில் தூக்கி லிடப் பட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்களின் வீரதீரத்தி னை யும், தியாகத்தையும் சிறப் பிக்கும் வகையில், சென்னை கிண்டி, திரு. வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுரு வப் படத்திற்கும், சேலம் மாவட்டம் சங்ககிரிக் கோட்டையில் தீரன் சின்ன மலை தூக்கிலிடப்பட்ட இடத்திலும், அவர்களின் நினைவுத்தூண் அமைந் துள்ள இடத்திலும் அன் னார் அவர்களின் நினைவி னைப் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டு வருகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளைப் போற்றுகின்ற வகையில், தமிழ்நாடு அர சின் சார்பில் 03.08.2023 அன்று காலை 9.45 நடை பெறும் நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அரசு உயர் அலுவலர் கள் மற்றும் முக்கிய பிரமு கர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

### அமெரிக்காவில்

## பிளாஸ்டிக் பயன்படுத்த கட்டுப்பாடு!

நியூயார்க், ஆக. 3–

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 32 கோடி டன்கள் பிளாஸ்டிக் பொருட் கள் பயன்படுத்தப்படுகிறது. இதில் 95 சதவீதம் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகள் என நுகர்வோர் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு கமிட் டியின் அறிக்கை கூறுகிறது.

இந்தநிலையில் அமெரிக்காவின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றான நியூயார்க்கில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட் களை பயன்படுத்த கட்டுப்பாடு விதிக் கப்பட்டு உள்ளது. அதன்படி ஓட்டல்கள் மற்றும் உணவு வினியோக நிறுவனங் களில் பிளாஸ்டிக் டப்பாக்கள், கரண்டி மற்றும் கத்திகள் போன்றவற்றை வாடிக்கையாளர் கேட்காமல் வழங்கக் கூடாது. இதனை மீறும் நிறுவனங்க ளுக்கு ரூ.20 ஆயிரம் வரை அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள் ளது. ஒருமுறை மட்டுமே பயன்படுத் தும் பிளாஸ்டிக் குப்பைகளை குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டு இருப்பதாக அந்த நகர மேயர் எரிக் ஆடம்ஸ் கூறினார்.

## குடியரசுத் தலைவருடன் சந்திப்பு!

... முதல் பக்கத் தொடர்ச்சி

குடியரசுத்தலைவரை சந் தித்தோம்/ மணிப்பூர் வன் முறை தொடர்பான முழு விபரங்களையும் குடியரசுத்தலைவரிடம் தெரிவித்தோம்.

இப்பிரச்சினை தொடர் பாக மக்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானம் கொண்டு வருகிறோம். மாநிலங்களவையில் பிரிவு 267ன் கீழ் தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க கோரி வருகிறோம்.

ஆனால் அரசு இரு அவைகளிலும் அதனை ஏற்காமல் நிராகரித்து வரு கிறது.

மணிப்பூரில் மெய்த்தி, குக்கி சமூக மக்கள் இடையே வன்முறை நடந்து வருகிறது. அங்கு அமைதி திரும்ப பிரதமர் மோடி நேரடியாக மணிப் பூர் செல்ல வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அவர் விளக்கம் அளிக்கா மல் பல்வேறு இடங்களுக் கும் சென்று உரையாற்றி வருவது வேதனைக்குரி யது.

நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லாத நிலை உருவாகி உள்ளது. மணிப்பூர் விவாகரத்துக்கு தீர்வுகாண குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத் துள்ளோம். மாநிலங்கள வையில் விதி எண் 267ன் கீழ் விவாதம் நடந்த எதிர்க்கட்சிகள் வலியு றுத்தி வருகின்றனர். விதி எண் 267ன் கீழ் விவாதம் நடத்த ஆளுங்கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கின்ற னர். மணிப்பூர் குறித்து விவாதிக்க மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகி றது.

**கலவரத்துக்கு காரணமானவர்களை தண்டிக்க வேண்டும்!**

மணிப்பூர் அமைதியை நிலைநாட்ட குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 3 மாதங்களாக நடை பெற்ற கலவரத்துக்கு கார ணமானவர்கள் தண்டிக் கப்பட வேண்டும். மணிப்பூரில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு ஒன் றிய, மாநில அரசு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மல்லிகார் ஜூன கார்கே கூறினர்.